மனித வள மேலாண்மைத்
(பயிற்சி-I) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
சோபகிருது, தை-18
திருவள்ளுவர் ஆண்டு 2055

**கடித எண்.6197819/பயிற்சி-1/2023-1, நாள் 01.02.2024.**

Addl. Chief Secy. to Govt.
T, C & RE Department
06 FEB 2024
146
Secretariat, Chennai-600 009.

அனுப்புநர்
திரு. எஸ். நாகராஜன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர் (மு.கூ.பொ.)

பெறுநர்
அனைத்துத் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர்கள் /
முதன்மைச் செயலாளர்கள்/செயலாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை- 600 009.

ஐயா/ அம்மையீர்,

பொருள்: பயிற்சி - அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் – நேரடி மற்றும் கருணை அடிப்படையில் பணிநியமனம் - இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் - பணிவரன்முறைக்கு காத்திராமல் அடிப்படைப் பயிற்சி வழங்குதல் - துறைத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல் - தொடர்பாக.

*****

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் மற்றும் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறைக்கு பின்னரே, முதுநிலை அடிப்படையில் அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் அடிப்படை பயிற்சி வழங்கப்படுகிறது. சில சமயங்களில் மேற்படி சூழ்நிலையினால் அரசுப்பணியாளர்கள் அதிக எண்ணிக்கையில் பணியமர்த்தப்படும்போது, அவர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு, தேக்கநிலை உருவாகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டும், பணியாளர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்படும் பயிற்சியானது அவர்கள் தங்களது பணியினை செம்மையாக செய்வதற்கு வழிவகுக்கும் என்பதனை கருத்திற்கொண்டும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி பெறுவதற்கு, சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணிவரன்முறை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற நடைமுறையை தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

2. எனவே, இனிவருங்காலங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, துறைத் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் மற்றும் கருணை அடிப்படையில்

(த.பி.பா.)

பணிநியமனம் பெறும் இளநிலை உதவியாளர்களை அவர்களின் பணிவரன்முறை ஆணை வெளியிடும்வரை காத்திருக்காமல், முதுநிலை அடிப்படையில் அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் வழங்கப்படும் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பி வைக்க துறைத் தலைவர்களை அறிவுறுத்துமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசுச் செயலாளருக்காக 2/2/2024

நகல்

1. பயிற்சித் துறைத் தலைவர்,
எண்.163/1, பி.எஸ். குமாரசாமி இராஜா சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.

2. முதல்வர்/மாவட்ட வருவாய் அலுவலர்,
அரசு அலுவலர் பயிற்சி நிலையம்,
பவானிசாகர், ஈரோடு மாவட்டம் – 638 451.

3. மனிதவள மேலாண்மை (பி) துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.